
# முத்துப் பாடல்கள்



பேராசிரியர் மயிலை சிவமுத்து

# முத்துப்பாடல்கள்

பேராசிரியர்
மயிலை சிவமுத்து

புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
135, பவழக்காரத் தெரு ··· சென்னை-1

# பதிப்புரை

**பேராசிரியர் மயிலை சிவமுத்து** அவர்கள் நாடறிந்த ஓர் இலக்கியப் பூஞ்சோலை. சென்னை மாணவர் மன்றத்தின் வாயிலாகத் தம் வாழ்நாளெல்லாம் மாணவ மணிகளின் மொழி நலமும் கலை நலமும் கருதி அரும்பெரும் தொண்டுகள் ஆற்றிவருபவர். சிறப்பாகப் பிற்காலப் பெரியோர்களாகிய இக்காலக் குழந்தைகளின் நல்வாழ்வை எண்ணி எண்ணிப் பல புதுத் துறைகளில் அவர்கள் புரிந்துவரும் பணிகள் அளவில்லாதவை.

குழந்தைகளுக்குத் தகுதியான நல்ல புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்னும் ஆர்வம் மிக்கது இக்காலம். குழந்தை இலக்கியப் பசி எங்கும் பெருகி இருக்கும் இந்நாளில் பேராசிரியர் அவர்களின் அரிய இனிய பாடல்களின் தொகுப்பாகிய இப் புத்தகத்தை வெளியிடுவதில் நாங்கள் பெருமிதம் அடைகின்றோம்; பேரின்பம் பெறுகின்றோம். எங்கள் முயற்சியினைப் பாராட்டி வாழ்த்தியருளிய ஆசிரியருக்கு என்றும் நன்றி பாராட்டுகின்றோம்.

பேராசிரியர் அவர்கள் குழந்தைகளுக்காக அவ்வப்போது பாடிய பாடல்களைத் திரட்டி வரிசைப்படுத்தி இதோ, '**முத்துப்பாடல்கள்**' என்று எங்களிடம் அளித்து இதனை அச்சிடும்போது உடனிருந்து உதவி புரிந்த புலவர் **தணிகைச் செல்வநாதன்** அவர்கட்கும், குழந்தைக் கவிஞர் **அழ. வள்ளியப்பா** அவர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.


[illegible] }
[illegible] }

*சித. இராமநாதன்*

# பாட்டும் பக்கமும்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | எங்கள் பாப்பா | 1 |
| 2. | அப்பா அம்மா | 2 |
| 3. | பிட்டு | 3 |
| 4. | கிளி | 4 |
| 5. | நிலாச் சோறு | 5 |
| 6. | மயில்போல் ஆடுவேன் | 6 |
| 7. | மாமா வந்தார் | 7 |
| 8. | ஆடுவோம் பாடுவோம் | 8 |
| 9. | பாப்பா எழுந்திரு | 9 |
| 10. | உண்மையே பேசுவோம் | 10 |
| 11. | அ ஆ பாடல் | 11 |
| 12. | நிலா | 12 |
| 13. | சேவல் | 13 |
| 14. | மயில் | 14 |
| 15. | நெல் வயல் | 15 |
| 16. | வேண்டும் | 16 |
| 17. | எறும்பு | 18 |
| 18. | அண்ணன் தம்பி | 19 |
| 19. | திசைகள் | 20 |
| 20. | மழை | 21 |
| 21. | காந்தித் தாத்தா | 22 |
| 22. | திரு. வி. க. தாத்தா | 23 |
| 23. | விசிறி | 24 |
| 24. | கைத்தொழில் | 25 |

| எண் | | பக் |
|---|---|---|
| 25. | அன்னை அன்பு | |
| 26. | அப்பாவைப்போல் நான் ஆனால் | |
| 27. | கோழிக் கதை | |
| 28. | எண்கள் பாட்டு | |
| 29. | பன்னிரண்டு மாதங்கள் | |
| 30. | எங்கள் நாடு | |
| 31. | ஏழைக்குச் சோறிட வேண்டும் | |
| 32. | என் விருப்பம் | |
| 33. | பருத்தி | |
| 34. | பொன் முரசு | |
| 35. | நமது கடமை | |
| 36. | உடற் பயிற்சி | |
| 37. | சிறுவர்களும் சிறுகுயிலும் | |
| 38. | கரிகால் வளவன் | |
| 39. | கற்றது கைம்மண் அளவு | |
| 40. | தந்தையைச் சிறைமீட்ட மைந்தன் | |
| 41. | எங்கள் தமிழ் | |
| 42. | முத்தேவியர் வணக்கம் | |
| 43. | கடவுள் வணக்கம் | |
| 44. | முறையீடு | |
| 45. | தமிழ் மொழி வாழ்த்து | |



**பேராசிரியர் மயிலை சிவமுத்து**

'தித்திக்கும் கவிபாடித்
தேன்கதைகள் பலசொல்லும்
சிவமுத்துப் பெருமானே !
செந்தமிழ்போல் வாழியவே'

— அழ. வள்ளியப்பா.



## 1. எங்கள் பாப்பா

எங்கள் பாப்பா நல்ல பாப்பா.
என்னைக் கண்டால் சிரிக்கும் பாப்பா.

அம்மா-அப்பா என்னும் பாப்பா.
ஆ-ஈ என்றே படிக்கும் பாப்பா.

பாப்பா வுக்கு முத்தம் கொடுங்கள்.
பாப்பா உமக்கு முத்தம் கொடுக்கும்.



## 2. அப்பா அம்மா

அப்பா அம்மா வாரும் ;
பலகை புத்தகம் தாரும்.

பாட சாலை போவேன் ;
பெரிய மனிதன் ஆவேன்.

காசும் பணமும் பெறுவேன் ;
கையில் வாரித் தருவேன்.




# 3. பிட்டு

மாமி சுட்ட பிட்டு
மடியில் வாங்கிக் கட்டு.

சீனி சர்க்கரை இட்டு
சிறிது நெய்யும் சொட்டு.

உண்டு ஏப்பம் விட்டு
ஓடி வாநீ பட்டு.



## 4. கிளி

கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்
பஞ்ச வர்ணக் கிளியே!
நல்ல வார்த்தை பேசு;
நாட்டி யங்கள் ஆடு.

முத்தம் கொடுக்க வந்தால்
முகத்தில் குத்த வேண்டாம்.
திருட்டுப் பையன் என்ருல்
திரும்பிப் பார்க்க மாட்டேன்.



## 5. நிலாச் சோறு

பாப்பா பாப்பா ஓடிவா
பாலும் சோறும் தருவேன்வா.

நிலாச் சோறு ஆக்கலாம்
நெய்யும் பாலும் உண்ணலாம்.

பருப்பும் சோறும் தின்னலாம்
பள்ளிக் கூடம் போகலாம்.



## 6. மயில்போல் ஆடுவேன்

மயில் போல் ஆடுவேன்
மான் போல் ஓடுவேன்
குயில் போல் பாடுவேன்
குருவி போல் தேடுவேன்.

பூனை போல் பதுங்குவேன்
புலி போல் பாய்வேன்
சிங்கம் போல் வாழ்வேன்
சிறிதும் நான் அஞ்சேன்.



## 7. மாமா வந்தார்

எங்கள் மாமா வந்தார்;
எனக்குக் காசு தந்தார்.
மிடுக்காய்க் கடைக்குச் சென்றேன்;
மிட்டாய் வாங்கித் தின்றேன்.

எங்கள் அண்ணு வந்தார்
பலகை புத்தகம் தந்தார்
பள்ளிக் கூடம் போனேன்;
நல்ல பையன் ஆனேன்.




## 8. ஆடுவோம் பாடுவோம்

ஓடி ஓடி ஆடுவோம்
ஒன்று கூடிப் பாடுவோம். —ஓடி ஓடி

காக்கை குருவி போலவே
கலந்து நாமும் வாழவே —ஓடி ஓடி

குயிலும் மயிலும் போலவே
கூடி இருந்து வாழவே —ஓடி ஓடி

அண்ணன் தம்பி போலவே
அன்பு செய்து வாழவே. —ஓடி ஓடி



## 9. பாப்பா எழுந்திரு

பொழுது விடிந்தது —எழுந்திரு பாப்பா.
பொன்வண்டு போலநீ —எழுந்திரு பாப்பா.
பாடம் படித்திட —எழுந்திரு பாப்பா.
பள்ளிக்குச் சென்றிட —எழுந்திரு பாப்பா.
சிட்டுக் குருவிபோல் —எழுந்திரு பாப்பா.
சிரித்த முகத்துடன் —எழுந்திரு பாப்பா.



## 10. உண்மையே பேசுவோம்

பொய் சொல்ல மாட்டோம்
பொய் சொல்ல மாட்டோம்.
தப்பிதம் செய்தாலும்
தண்டிக்க வந்தாலும்
பொய் சொல்ல மாட்டோம்
பொய் சொல்ல மாட்டோம்.
ஆயிரம் வந்தாலும்
ஆயிரம் போனாலும்
பொய் சொல்ல மாட்டோம்
பொய் சொல்ல மாட்டோம்.
சொல்என்று சொன்னாலும்
சோறில்லை என்றாலும்
பொய் சொல்ல மாட்டோம்
பொய் சொல்ல மாட்டோம்.



## 11. அ ஆ பாடல்

அணிலும் ஆடும் அஆவாம்.
இலையும் ஈயும் இஈயாம்.

உரலும் ஊசியும் உஊவாம்.
எலியும் ஏணியும் எஏயாம்.

ஒட்டை ஓணன் ஒஓவாம்.
ஐவர் ஔடதம் ஐஔவாம்,

அஆ பாடம் கற்றேமே;
அன்னை முத்தம் பெற்றேமே.



## 12. நிலா

வெள்ளை வெள்ளை நிலாவே,
வெளியில் வந்து உலாவே.
ஒன்று, இரண்டு, மூன்று,
என்பதற்குள் தோன்று.
நான்கு, ஐந்து, ஆறு,
நாங்கள் சொன்னோம் பாரு.
ஏழு, எட்டு, ஒன்பது,
ஏன் வராமல் நிற்பது?
பத்து, நூறு, ஆயிரம்,
பறந்து வாநீ சீக்கிரம்.



# 13. சேவல்

**கொக்கரகோ—கொக்கரகோ**

சின்னஞ் சிறுவர்களே
இன்னும் உறங்குவதோ —கொ
பொழுது விடிந்தது பார்
பூவும் மலர்ந்ததுபார் —கொ
காலே எழுந்திருப்பீர்
கடவுள் பதம்தொழுவீர் —கொ
பாடம் படித்திடுவீர்
பணமே குவித்திடுவீர் —கொ
நாடு செழித்திடவே
நாளும் உழைத்திடுவீர் —கொ



## 14. மயில்

பச்சை மயிலே! இங்கேவா ;
பாலும் சோறும் வேண்டாவா?
இச்சை யுடனே நான்தருவேன் ;
இன்பாய் என்னுடன் ஆடிடவா.

அழகாய் உன்னைப் போலவே
அசைந்து நானும் ஆடவே,
பழக வேண்டும் பொன்மயிலே!
பார்க்கச் சற்றே ஆடிடவா.

இத்தனை கண்கள் தோகையிலே
எழுதித் தந்தவர் யார்மயிலே?
அத்தனை கண்கள் எனக்கிலையே!
அமைத்தவர் யாரெனத் தெரியலையே



## 15. நெல் வயல்


வயல் இது பார்—வயல் இது பார்
வளம் பெருகிய பசும் வயல் இது பார்!

நிலம் திருத்தி நீர் இறைத்து
நலமுற நாற்றினை நடுவதைப் பார்!

வரப்புயர்ந்தால் நீர் உயரும்
வளம்பெற நெற்கதிர் விளைவதைப் பார்!

ஒரு நெல்லே ஒரு கதிராய்
ஒருகதிர் பலமணி ஆவதைப் பார்!

பெரியோர் போல் தலைவணங்கிப்
பரிவுடன் பயிர்தலை சாய்வதைப் பார்!





## 16. வேண்டும்

ஓங்கி வளர வேண்டும்;
உடம்பு வலுக்க வேண்டும்.

ஆடை அணிகள் வேண்டும்;
அறிவு மிகவும் வேண்டும்.

கல்வி கற்க வேண்டும்;
காசு சேர்க்க வேண்டும்.






## வேண்டும்

பறக்கும் வண்டி வேண்டும் ;
பலரும் புகழ வேண்டும்.

மாடி வீடு வேண்டும் ;
மாடும் கன்றும் வேண்டும்.

அன்னை தந்தை என்றும்
அன்பாய் வாழ வேண்டும்.





# 17. எறும்பு

இன்பம் உள்ள எறும்பே,
எங்கள் கட்டிக் கரும்பே,
துன்பம் ஒன்றும் புரியோம்;
தின்ப தற்கும் அருவோம்.

உன்னைப் போல உழைப்போம்;
ஊக்கம் கொண்டு பிழைப்போம்.
பொன்னின் மிக்க எறும்பே,
போக வேண்டாம் திரும்பே.

காலை தன்னில் எழுவோம்;
கடவுள் பாதம் தொழுவோம்.
நூலைக் கற்போம் சீராய்,
நுண்ணெறும்பே, வாராய்.




## 18. அண்ணன் தம்பி

அண்ணன் தம்பி நாங்கள்
அருமை நண்பர் நாங்கள்.
எங்கள் கதை கேளும்
இன்னும் சொன்னால் நீளும்.
எங்கள் அண்ணன் ராஜா;
என்றன் பெயர் ரோஜா.
என்றும் சண்டை போடோம்:
ஏக்கம் உற்று வாடோம்.
உண்ணுவதும் ஒன்றே;
உறங்குவதும் ஒன்றே.
ஒன்று கூடி வாழ்வோம்;
உதவி செய்யச் சூழ்வோம்.
எங்களைப்போல் யாரே
இன்புடன்வாழ் வாரே?




## 19. திசைகள்

சூரியன் முளைப்பது **கிழக்கு**
சொல்லின் இதுவே வழக்கு.
மறையும் பக்கம் **மேற்கு**
மனதில் ஐயம் நீக்கு.
நின்று கிழக்கு நோக்கு
நன்று கையைத் தூக்கு.
வலக்கைப் பக்கம் **தெற்கு**
வாதம் வேண்டாம் இதற்கு.
இடக்கைப் பக்கம் **வடக்கு**
போதும் கையை மடக்கு.



## 20. மழை

மழையே, மழையே, பெய்வாயே ;
மாணவர் மகிழச் செய்வாயே.
சிறிதே தூறிச் செல்லாதே ;
சிறியோர் துயரம் பொல்லாதே.
கப்பல் பலவே பண்ணுவமே ;
கடிதில் விடவே எண்ணுவமே.
கத்திக் கப்பல் விடுவோமே ;
கையால் நீரைத் தொடுவோமே.
கப்பல் கண்டால் எள்ளாதே ;
கடலில் கொண்டு தள்ளாதே.
வானில் மேகம் கண்டிடுவோம் ;
'வாவா மழையே' என்றிடுவோம்.



## 21. காந்தித் தாத்தா

உண்மை பேச அஞ்சமாட்டார்
காந்தித் தாத்தா
நானும் அவர் போல்நடப்பேன்
நல்ல பாப்பா.
ஒற்று மைக்கே பாடுபட்டார்
காந்தித் தாத்தா
நானும் அவர் போல்நடப்பேன்
நல்ல பாப்பா.
உலக மெல்லாம் பேரெடுத்தார்
காந்தித் தாத்தா
நானும் அவர் போல்நடப்பேன்
நல்ல பாப்பா.




## 22. திரு. வி. க. தாத்தா

காந்தீயத்தைப் போற்றி வளர்த்தவர்
திரு. வி. க. தாத்தா !
கடவுள் நெறியில் கருத்துடன் வாழ்ந்தவர்
திரு. வி. க. தாத்தா !

சாந்த குணத்தவர் தீந்தமிழ் மொழியினர்
திரு. வி. க. தாத்தா !
மாந்தருள் தாழ்ந்தவர் இலரெனப் பகர்ந்தவர்
திரு. வி. க. தாத்தா !

பெண்ணினின் பெருமையைப் போற்றி மகிழ்ந்தவர்
திரு. வி. க. தாத்தா !
பேச்சிலும் எழுத்திலும் பின்னடை யாதவர்
திரு. வி. க. தாத்தா !

எண்ணலில் ஏழைகள் நலனுற உழைத்தவர்
திரு. வி. க. தாத்தா !
தோழர்கள் வாழ்ந்திட நெறிவகுத் துரைத்தவர்
திரு. வி. க. தாத்தா !




## 23. விசிறி

ஓங்கி உயர்ந்த பனைமரமாம்;
உச்சியில் ஓலைக் குருத்தழகாம்;
பாங்காய் அதனைக் கொய்திடுவார்;
பக்குவ மாக வகிர்ந்திடுவார்.

அழகாய் விசிறி கட்டிடுவார்;
அலங்கா ரங்கள் செய்திடுவார்;
ஒழுங்காய்க் கடையில் வைத்திடுவார்;
ஒவ்வொன் ருக விற்றிடுவார்.

மிக்க வெய்யிற் காலத்தில்
வியர்வை ஒழுகும் தேகத்தில்.
மக்கள் விசிறி வாங்குவரே;
மகிழ்வாய் இரவில் தூங்குவரே.



## 24. கைத்தொழில்

கைத்தொழில் கற்றிட வேண்டும்—அதை
நித்தமும் போற்றிட வேண்டும்.

கைத்தொழில் இல்லாத நாடு—புலி
கரடிகள் வாழ்கின்ற காடு.

மெத்தவும் சுற்றிடல் ஏனோ?—உயர்
மெத்தையில் தூங்கிடத் தானோ?

எத்துணைப் பேர்கல்வி கற்ருர்?—இங்கே
என்னநம் நாட்டில பெற்ருர்?

பட்டங்கள் பெற்றிடப் போவார்—சிறு
பாயும் முடைந்திட லாகார்.

சின்னஞ் சிறுவரே நீரும்—அவர்
செல்வழி போகாதீர் வாரும்.


இப்போதே பற்பல செய்வீர்—என்றும்
இன்புட னேஇருந் துய்வீர்.

கூடை முடைந்திட வேண்டும்—உயர்
ஆடையும் நெய்திட வேண்டும்.

பெட்டிகள் செய்திடக் கற்பீர்—பெரு
மேசையும் செய்துபின் விற்பீர்.

சீனச் சிறுவரைப் பாரீர்—உயர்
சீமைச் சிறுவரைப் பாரீர்.

யாவரும் கைத்தொழில் கற்பார்—கலை
யாவும் சிறப்புற நிற்பார்.



# 25. அன்னை அன்பு








## அன்னை அன்பு

என்னைப் பெற்ற நற்றாயே,
எங்கே அன்பு கற்றாயே?

'என்றன் கண்ணே' என்பாயே,
எனக்குத் தந்தே தின்பாயே.

கண்டால் முத்தம் அளிப்பாயே,
கட்டி அணைத்துக் களிப்பாயே.





ஆடை அணிகள் தரிப்பாயே,
அழகு பார்த்துச் சிரிப்பாயே.

'அம்மா, தலை நோய்' என்றாலும்,
அலுத்துக் களைத்து நின்றாலும்,

அழுது கண்ணீர் வடிப்பாயே;
அன்பால் நெஞ்சம் துடிப்பாயே.

தெய்வம் என்றே துணிவேனே,
தினமுன் பாதம் பணிவேனே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.







## 26. அப்பாவைப்போல் நான் ஆனுல்

அப்பா வைப்போல் நான்ஆனுல்
ஆயிரம் ரூபாய் சேர்த்திடுவேன்;
ஆனை குதிரை வாங்கிடுவேன்.

அப்பா வைப்போல் நான்ஆனுல்
மாடி வீடு கட்டிடுவேன்;
மோட்டார் வண்டி வாங்கிடுவேன்.

அப்பா வைப்போல் நான்ஆனுல்
தண்ணீர்ப் பந்தல் வைத்திடுவேன்;
தருமம் பலவும் செய்திடுவேன்.

அப்பா வைப்போல் நான்ஆனுல்
எங்கும் பொன்னை குவித்திடுவேன்;
எல்லோ ருக்கும் அளித்திடுவேன்.

அப்பா வைப்போல் நான்ஆனுல்
உலகம் முழுதும் சுற்றிடுவேன்;
உண்மை பலவும் கற்றிடுவேன்.

## 27. கோழிக் கதை



கோழி ஒன்று
இருந்தது.




மூன்று முட்டை
இட்டது.




ஒன்று உடைந்து
விட்டது.




இரண்டு மிகுதி
இருந்தன.



ஒன்று திருடு
போயிற்று.




ஒன்று மிகுதி
இருந்தது.




கோழி அவயம்
காத்தது.




முடிவில் முட்டை
வெடித்தது.



வாத்துக் குஞ்சு
வந்தது.



கோழி மிகவும்
வாடிற்று.



வாத்துக் குஞ்சு
ஓடிற்று.

முட்டையை எவரோ மாற்றிவிட்டனரே!


# 28. எண்கள் பாட்டு



ஊர் ஒன்று இருந்தது ;



இரண்டு கிழவர்
இருந்தனர்.




மூன்று புதல்வர்
பிறந்தனர் ;




நான்கு நிலங்கள்
வாங்கினர்.




ஐந்து வீடு கட்டினர் ;



ஆறு கிணறு
வெட்டினர்.




ஏழு மரங்கள் நட்டனர் ;



எட்டுக் கிளைகள்
விட்டன.




ஒன்பது காய்காய்த்தன;



பத்துப் பறவை வந்தன.

கொத்திக் கொத்தித் தின்றன.




# 29. பன்னிரண்டு மாதங்கள்

### தமிழ் மாதங்கள்

சித்திரை யோடு வைகாசி
சிறந்த நல்ல இளவேனில்;
ஆனி ஆடி மாதங்கள்
அப்பா! மிகவும் முதுவேனில்;
ஆவணி யோடு புரட்டாசி
ஆகா! அழகிய கார்காலம்;
ஐப்பசி கார்த்திகை வந்தாலோ
அந்தோ! மிகவும் குளிர்காலம்;
மார்கழி மாதம் தைமாதம்
முன்னே பனிதான் பெய்மாதம்;
மாசி பங்குனி மாதங்கள்
பின்னே பனிபெய் மாதங்கள்.

ஆங்கில நாளில் ஐயம்ஏன் ?
அதுவும் எளிதே ஏப்ரல் ஜூன்
நவம்ப ரோடு செப்டம்பர்
நாட்கள் முப்ப தாம்என்பர் ;
பிப்பிர வரிஇரு பத்தெட்டாம் ;
பின்னும் இதற்கோர் சொட்டுண்டாம்.
நாலாண் டிற்கோர் நாளதிகம் ;
நினைவில் வைப்பாய் இப்பதிகம்.
மற்றவை முப்பத் தொருநாளே ;
மறக்க வேண்டாம் மறுநாளே.



# 30. எங்கள் நாடு

நீர்வளமும் நிலவளமும் நிலவியநன் ஞடு ;
ஏர்வளத்தின் பேர்வளத்தால் ஏற்றமுள்ள நாடு.

பொற்குவையால் நெற்குவையால் புகழடைந்த நாடு ;
சிற்பமுடன் ஓவியங்கள் சிறந்திருக்கும் நாடு.

வாழைபலா மாமரங்கள் வளமிகுந்த நாடு ;
தாழைபனே தென்னேஇவை தழைத்துயர்ந்த நாடு.

ஆவினத்தின் அருமையறிந் தாதரிக்கும் நாடு ;
கோவில்களும் கோபுரமும் கொண்டொளிரும் நாடு.





# எங்கள் நாடு


மல்லியொடு முல்லைமலர் மணங்கமழும் நாடு ;
அல்லியொடு தாமரையின் அழகுமிகும் நாடு.

பள்ளர்களும் மள்ளர்களும் பண்மிழற்றும் நாடு ;
வள்ளல்களும் வீரர்களும் வாழ்ந்திருந்த நாடு.

கைத்தொழிலும் வாணிபமும் கற்றறிந்த நாடு ;
வித்தையினில் வல்லவர்கள் வீற்றிருந்த நாடு.

அவ்வைதிரு வள்ளுவர்நல் லறம்உரைத்த நாடு ;
எவ்வெவரும் போற்றுகின்ற எங்கள் தமிழ் நாடே.





## 32. என் விருப்பம்


காலையில் எழுவேன்; கடவுளைத் தொழுவேன்;
    கருத்துடன் படிப்பேனே ;
வேலைகள் என்றன் பெற்றோர் இடுமுன்
    விருப்புடன் புரிவேனே. 1

கூழே எனினும் குறைகூ றாமல்
    களிப்புடன் உண்பேனே ;
ஏழை எளியோர் ஏக்கம் கண்டால்
    இன்புடன் தீர்ப்பேனே. 2

பொன்னே தரினும் பொய்பே சாமல்
    புகழே பெறுவேனே ;
என்னால் ஆகா தென்றே எதற்கும்
    ஏங்கித் தளரேனே. 3

கல்விச் சாலை சென்றே கற்கக்
    காலந் தவறேனே ;
சொல்லும் பாடம் யாவும் கேட்டே
    சொகுசாய்க் கற்பேனே. 4

வயதில் பெரியோர் வருதல் கண்டால்
    வணக்கம் புரிவேனே ;
நயமே பேசி நன்மை நாடி
    நலமாய் வாழ்வேனே. 5



# 33. பருத்தி

பச்சைச் செடியில் நான்பிறந்தேன்—உயர்
பருத்திக் காயினுள் நான் இருந்தேன் ;
மெச்சும் வகையில் நான்வளர்ந்தேன்—மிக
மேன்மையும் வெண்மையு மாய்த் திகழ்ந்தேன். 1

என்ணே வெளியில் எடுத்து விட்டார்—இங்கே
ஏற்றபடி யெல்லாம் செய்துவிட்டார் ;
அந்நிய நாடுகள் சென்றலேந்தேன்—அங்கே
ஆலே பலவும்நான் கண்டறிந்தேன். 2

பஞ்சுமெத் தைகளும் தலேயணேயும்—கொண்டு
பாலர்கள் தூங்குவ தென்னுலே ;
கஞ்சியில் லேயென்போர் கைராட்டையால்—தினம்
கொஞ்சி மகிழ்வதும் என்னுலே. 3





# பருத்தி

வேளைக் கொருவிதம் உடையுடுத்து—மக்கள்
வீதியில் செல்வதும் என்னாலே;
நாளும் நிகழும் நிகழ்ச்சிசொலும்—அந்த
நல்ல புதினமும் என்னாலே. 4

பாலர் படிப்பதும் என்னாலே—உயர்
சீலம் உணர்வதும் என்னாலே;
வேலை உயர்வதும் என்னாலே—பொருள்
வேண்டிப் பெறுவதும் என்னாலே. 5

நாடு சிறப்பதும் என்னாலே—நல்ல
நாகரி கங்களும் என்னாலே;
ஆடலும் பாடலும் என்னாலே—என்னை
ஆதரிப் பீர்உயர் பொன்போலே. 6





# 34. பொன் முரசு


கொட்டிடு கொட்டிடு முரசே—எங்கள்
கொள்கை இதுவென்று முரசே.

வித்தையில் வல்லவர் ஆவோம்—மிக்க
வீரர்கள் என்னவே வாழ்வோம் ;
நித்தமும் கொட்டிடு முரசே—எங்கும்
நிற்காமல் கொட்டிடு முரசே. (கொட்டிடு)

அண்ணனும் தம்பியும் போலே—நாங்கள்
அன்புடன் இங்கிருப் போமே ;
திண்ணம் இதுகொட்டு முரசே—ஒரு
தீங்கு புரிந்திடோம் முரசே. (கொட்டிடு)

ஏழை பணக்காரர் என்றே—இல்லை
எங்களுக் குள்யாரும் ஒன்றே ;
தோழர்கள் நாங்கள் நன்முரசே—கொட்டு
தொம்தோம் எனவேபொன் முரசே.
(கொட்டிடு)

உண்மை உரைத்திட அஞ்சோம்—உண்ணும்
உணவுக் கொருநாளும் கெஞ்சோம் ;
‘ தண்தண தணதண ’ எனவே—சற்றும்
தயங்காமல் கொட்டிடு முரசே.
(கொட்டிடு)



# 35. நமது கடமை

பேருடனே புகழ் பெறுவோம்—நம்மைப்
பெற்றநன் னாட்டுக்கே உதவிகள் புரிவோம்.
சீருடன் செல்வமும் சேர்ப்போம்—நல்ல
சீமான்கள் என்னவே சிறப்புடன் வாழ்வோம்.
(பேரு)

ஐந்து வயதுள்ள சிறுவன்—நீரின்
ஆவியால் யந்திரம் இயக்கிய ஒருவன்
தந்த உதவியி னாலே—இந்தத்
தரணியில் உள்ளவர் புகழ்வது போலே—
(பேரு)


நிலக்கரி வாரிய சிற்றாள்—நல்ல
நீராவி வண்டிக ளால்புகழ் பெற்றான்.
விலக்குதற் காருளர் நம்மை—நாமும்
வேண்டி உழைத்திடில் வந்திடும் நன்மை—
(பேரு)

பாடும் புகைப்படப் பெருமை—இது
பத்திரி கைவிற்ற பாலகன் உரிமை.
நாடு புகழ்கின்ற தன்றோ—நாமும்
நற்பெயர் பெற்று நிலவுதல் என்றோ ?—
(பேரு)

வான விமான உயர்ச்சி—இரு
வாலிபர் கூடி உழைத்த முயற்சி.
ஈனமன் றோநமக் கென்றும்—இந்த
உலகினுக் குதவுதல் இலையெனில் ஒன்றும்—
(பேரு)

மோட்டார் எனும்வண்டி பெற்றோம்—மற்றும்
மின்சார வண்டியும் தீபமும் உற்றோம்.
காட்டாள் எனப்படு வோமோ—ஒன்றும்
கண்டறி யாமலே வாழ்ந்திடு வோமோ—
(பேரு)

பற்பல சாத்திரம் கற்போம்—இந்தப்
பாரினில் நாமும் சிறப்புற நிற்போம்.
அற்புத யந்திரம் செய்வோம்—நம்மை
அனைவரும் கொண்டாடிப் போற்றிட உய்வோம்.—
(பேரு)



# 36. உடற் பயிற்சி

வீமனைப் போல்வலு வேண்டும்—நல்ல
வீரமும் தீரமும் வேண்டும்—ரகு
ராமனைப்போல் குணம் வேண்டும்—அந்த
ராவணன் ஆண்மையும் வேண்டும். 1

சேவல் செருக்கினைக் காணீர்—அதன்
செல்வ நடைகண்டு நாணீர்—என்றும்
ஆவ லுடனுழைப் பீரேல்—மிக்க
ஆரோக்கி யம்பெறு வீரே. ௨

கூனற் குரங்குகள் போல—உடல்
குன்றி யிருந்திடல் ஆமோ?—அவ
மானமி தென்ன விடுப்பீர்—நிதம்
மார்பு நிமிர்ந்து நடப்பீர். 3

கட்டையும் வெட்டுதல் வேண்டும்—அதைக்
கட்டிச் சுமந்திடல் வேண்டும்—சிறு
பெட்டி எடுத்திடக் கெஞ்சும்—ஒரு
பேதையைக் கண்டுல கஞ்சும். 4

பொய்ம்மை புனைந்துரை யாதீர்—இகழ்
பூனைக் குணந்தனைத் தேடீர்—உயர்
மெய்ம்மை யினுக்குண்டு மேன்மை—வேறு
மேதினி யில்இலை ஆண்மை. 5

மலலர் உடலுரம் வேண்டும்—உயர்
மார்பும் அகன்றிடல் வேண்டும்—மிக
நல்லவர் என்றுல கேத்த—நிதம்
நன்மைகள் நாடிடல் வேண்டும். 6

சற்குணங் கள்பல பெற்ருர்—வித்யா
சாகரர் என்னும்அக் கற்ருர்—அவர்
பொற்குணம் யாவும் பெறுவோம்—புவி
போற்றும் புகழும் உறுவோம். 7

தோள்கள் பருத்திடல் வேண்டும்—உயர்
தூய்மைக் குணங்களும் வேண்டும்—பல
நாள்கள் கழித்திடல் நன்ரே?—நந்தம்
நாடு செழித்திடல் என்ரே? 8

அல்லும் பகலும் உழைத்தே—பச்சை
யப்பனைப் போலத் தழைத்தே—பல
நல்லறம் நாடிப் புரிவோம்—இந்த
நன்மதி யாவும் மறவோம். 9



## 37. சிறுவர்களும் சிறுகுயிலும்

சிறுவர் : நீலச் சிறுகுயிலே !
நின்போல் மகிழ்வுடனே
பாலர் வாழ்ந்திடவே
பகர்வாய் நல்வழியே. 1

குயில் : அன்பாய்க் கேட்டிடுவீர்
அருமைச் சிறுவர்களே ;
இன்போ டுரைத்திடுவேன் ;
இனிதே செவிசாய்ப்பீர் : 2

ஆடை அணிகளினுல்
ஆடம் பரம்வேண்டாம் ;
தேடி உழைத்திடுவீர்
தேவை தமையறிந்தே. 3

சிறுவர் : கருமைச் சிறுகுயில்நீ
காகம் போல்இருந்தும்
அருமைக் குரலுனக்கே
அமைந்த தெவ்வாறே ? 4

குயில் : குணம்போல் குரல்அமையும் ;
கோபம் தாபங்கள்
கணமும் வாராமே
காப்போர் பெறுவாரே. 5

சிறுவர் : என்றும் இனிமையுடன்
இசைக்கும் சிறுகுயிலே !
உன்றன் குணம் அமைய
உரைப்பாய் வழிஎமக்கே. 6

குயில் : இன்சொல் இயம்பிடுவீர் ;
ஏதம் நினையாதீர் ;
புன்சொல் புகலாதீர் ;
போதும் சிறுவர்களே. 7

சிறுவர் : பொன்போல் போற்றிடுவோம்
புனிதச் சிறுகுயிலே !
அன்பால் நீயுரைத்த
அருமை மதியினையே. 8



# 38. கரிகால் வளவன்

திங்கள் தோறும்
மும்மழை பொழியும்
திருமலி தமிழ்நாட்டில்
பொங்கும் மகிழ்வால்
பொற்புற ஆண்டனர்
புகழ்மலி மூவேந்தர். 1
சேரன் சோழன்
பாண்டியன் என்றே
செப்புவர் அவர்தம்மை
ஆரும் நிகரே
இலைஇலை எனவே
ஆண்டனர் அவனியினை. 2
சோறும் நீரும்
மிகுந்திடு நாடாம்
சோழர்தம் நன்னாடு
பேறும் பெருமையும்
பெற்றிட ஆண்டவர்
பெருவளச் சோழியர்கள். 3

திகழும் அவர்களுள்
திலகம் போன்றவன்
திருமா வளமன்னன் ;
புகழும் அறிவும்
ஆற்றலும் வாய்ந்தவன்
பொன்னேர் குணமன்னன். 4

சின்னஞ் சிறியவன்
என்னும் வயதினில்
திருமா வளமன்னன்
அன்ஞே! இழந்தான்
பெற்ருேர் அவர்தமை
அறியாப் பருவமதில். 5

ஆளும் உரிமையை
அன்புடன் ஏற்றனன்
திருமா வளஅரசன்
கேளும் கேளும்
பங்கா ளிகள்புரி
கெடுதியை என்சொல்வேன்! 6

ஏழாம் வயதில்
சிம்மா சனமதில்
ஏறினன் இளவரசன்
ஊழால் பகைவர்கள்
சிறையினில் அவன்தனை
உடனே அடைத்தனரே. 7

செய்தி அறிந்தனர் ;
சினமது கொண்டனர்
சோழப் பொதுமக்கள்.
உய்ந்திவர் போவதும்
உண்டோ எனவே
உறுமினர் பொதுமக்கள். 8

‘எங்கே? எங்கே?
திருமா வளவன்
எங்கே சொல்’லென்றே
பொங்கி எழுந்தனர்;
போரிட நின்றனர்
சோழப் பொதுமக்கள். 9

ஆர்த்தனர் அனைவரும்
அணுகினர் பகைவரை
ஆயுதக் கைகளுடன்
வேர்த்தனர் பகைவர்கள்
வெதும்பினர் சூழ்ச்சியில்
விரைந்தனர் புரிந்திடவே. 10

கேட்டினை எண்ணினர்
கீழ்மை நினைந்தனர்
கெடுமதி கொண்டவர்கள்
கோட்டையின் உட்புறம்
மூட்டினர் தீயினைக்
கொடியவர் பகைமையினால். 11

‘திகுதிகு திகு’வெனப்
பற்றி எரியுதே
பாழுந் தீச்சுடர்தான்!
‘குபுகுபு குபு’வெனப்
புகையுடன் எழுந்தது
கோட்டையின் உள்முழுதும். 12

தீயினைக் கண்டான்
திருமா வளவன்
திகைத்து நின்றனனே!
சேயினைத் தழுவும்
தாயென அனலும்
சிறுவனை அணுகியதே! 13

இளஞ்சேட் சென்னியின்
எழில்தவ மைந்தன்
ஏங்குதல் புரிவானோ?
உளந்தான் நடுக்குறத்
தீயினில் வெந்தே
இறந்தொழிந் திடுவானோ? 14

அறுத்தனன் தளைகளை
உடைத்தனன் பூட்டினை
அணுகினன் இடைவெளியை;
பொறுத்திலன் பாய்ந்தனன்
புலியென மதில்மிசை
பொற்றோள் கொட்டினனே. 15

சூழ்ந்தது சுடரொளி
சுட்டது கால்களைச்
சொல்லுதல் எளிதலவே.
வீழ்ந்தன கனல்குவை
தீய்ந்தன கால்களும்
வீரனும் அஞ்சிலனே. 16

அரிமா எனவே
அஞ்சா நெஞ்சுடன்
தாண்டினன் அனலினையே.
பரிமா எனவே
படர்ந்தனன் புவிமிசை
பகைவர்கள் நாணிடவே. 17

கால்கள் தீயில்
கரிந்தன அதனால்
கரிகால் பெயர்பெற்றான்.
நூல்கள் புகழ
வாழி அவன்பெயர்
நூறா யிரம் ஆண்டே. 18



# 39. கற்றது கைம்மண் அளவு

ஆதி நாளில் அவ்வை என்னும்
அரிய கிழவி இருந்தாள் ;—அவள்
ஓதி ஓதி உலகில் உள்ள
உண்மை பலவும் தெரிந்தாள். 1

கற்று வல்ல புலவர் பலரும்
கைகள் கூப்பித் தொழுவார்—'இவள்
பெற்ற பேறு யாவர் பெறுவார் ?'
என்று கூறிப் புகழ்வார். 2

ஒருநாள் அவ்வை ஊர்கள் பலவும்
உழன்று வருந்தி இளைத்தே—வழி
வருவாள் அவளோர் வனத்தின் இடையே
வந்து மிகவும் களைத்தே, 3

அருகே இருந்த அரிய நாவல்
மரத்தின் நிழலை அடைந்தாள்;—நீர்
பருக வேண்டிப் பலவும் எண்ணிப்
பெரிதும் உள்ளம் உடைந்தாள். 4

மரத்தின் மேலோர் சிறுவன் கனிகள்
பறித்தல் கண்டு மகிழ்ந்தாள்;—அவள்
உரத்துக் கூவித் தனக்கும் சிறிதே
உலுக்கிப் போடப் புகழ்ந்தாள். 5

'சுட்ட பழமோ? சுடுதல் இல்லாப்
பழங்கள் தரவோ? சொல்லாய்—நின்
இட்டம் உரைப்பின் ஈவேன் உனக்கே
இயம்ப வேண்டும் நல்லாய்.' 6

சிறுவன் கூறும் சொல்லின் பொருளைச்
சிந்தை செய்ய லானாள்;—பொருள்
அறியா ளாகி ஐயம் தீரும்
வகையில் வினவ லானாள். 7

சுடுதல் இல்லாக் கனிதா' என்றே
சொல்லி முடிக்கு முன்னே—அவன்
கடிதே கிளையைக் குலுக்க உதிரும்
காயும் கனியும் என்னே! 8

நாவல் மரத்தின் நலமார் கனிகள்
நிலத்தில் இருத்தல் கண்டாள்—நீர்
ஆவல் மிகுந்த அவ்வைக் கிழவி
அகத்தில் மகிழ்வு கொண்டாள். 9

எட்டிப் பறிக்க இயலாக் கனிகள்
எளிதில் பொறுக்கி எடுத்தாள் ;—அவள்
ஒட்டிக் கிடந்த மணலை வாயால்
ஊதி ஊதித் துடைத்தாள். 10

“கனிதான் சுடுகின் றனவோ ?” என்றே
கைகள் கொட்டிக் களித்தான் ;—அவன்
“இனியும் பொருள்தான் அறிந்தாய் இலையோ”
என்று சொல்லி நகைத்தான். 11

“சுடுதல் இல்லாக் கனியே செங்காய்
சுடுதல் பழங்கள்” என்றே—வன
நடுவே வாழும் சிறுவன் சொல்ல
நானும் அறிந்தேன் இன்றே. 12

மனமே மிகவும் கற்றோம் என்றே
மகிழ வேண்டாம் வீணே,”—எனக்
கனிவாய் அவ்வை கடிதே கவியும்
கட்டிக் கூறினாளே. 13

அவ்வை கூறிய கவி

கற்றதுகைம் மண்ணளவு கல்லாத(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்—மெத்த
வெறும்பந்தயங்கூற வேண்டா புலவீர்!
எறும்புந்தன் கையால்எண் சாண்.



# 40. தந்தையைச் சிறைமீட்ட மைந்தன்

***1.*** **இளமைப் பருவம் :**

சீர்மிகுந்த பேர்மிகுந்த
    செஞ்சிநகர் மன்னன்
யார்வரினும் அஞ்சாத
    ஆண்மையுள்ள மன்னன். 1

**ஜயசிங்கு ராஜனென**
    **ஜகம்புகழும் வீரன்**
தயவுள்ள வேந்தனவன்
    சண்டையிலும் தீரன். 2

முன்புபுரி நற்றவத்தால்
    **முகம்மதுகான்** என்பான்
இன்புடனே இளமையினில்
    அன்புகொள்ள வந்தான். 3

முகமதிய நண்பனவன்
முகமலர்ச்சி கண்டான்;
நகமுடனே சதையெனவே
நட்புரிமை கொண்டான். 4

இருவரிவர் ஒற்றுமைக்கே
இணையில்லை கூற.
ஒருவரைவிட் டொருவர்பிரிந்
திருந்ததில்லை வேறே. 5

சாதிமத பேதமது
சாற்றியதும் இல்லை;
நீதிநெறி நியமமதில்
நீங்கியதும் இல்லை. 6

ஒன்றெனவே உணவருந்தும்
உயர்குணத்தில் நின்றார்;
சென்றிறைவன் அடிவணங்கும்
செய்கையிலும் வென்றார். 7

குதிரைகளின் குறிப்புணரும்
கலைகள்மிகக் கற்றார்;
எதிரொருவர் இல்லையென
இயம்பிடவும் பெற்றார். 8

**2. தாயும் மைந்தனும்:**

இங்ஙனம் இவர்கள் இன்புடன் நாளும்
இருந்து வருதலுமே
மங்கள மாய்ப்பதி னாரும் வயதினை
மன்னன் அடைதலுமே. 1

பால குமரன் பரிவுடன் அன்னையைப்
பணிந்திடச் சென்றனனே !
நீல விழியினில் நீர்வடித் தன்னை
நின்றிடக் கண்டனனே ! 2

" அன்னாய்! அன்னாய்! அழுகையின் காரணம்
அறைகுவை," என்றனனே ;
" பொன்னே, கண்ணே புகலுவன்," என்றே
பூவை நவின்றனளே : 3

" டில்லியின் மன்னவன் தெய்வக் குதிரையைத்
தேடிப் பெற்றனனும் ;
வல்லவர் வந்ததை வகைபெற ஓட்டிப்
பந்தயம் வைத்தனனும் ; 4

நல்லது குதிரையை நான்அடக் குவனென
நாடினர் உன்தந்தை ;
சொல்லிட மனமிலை சூழ்ந்தனர் சிறை," யெனச்
சோர்ந்தனள் நல்லன்னை. 5

" ஆஹா " என்றே அலறி எழுந்தான்
அஞ்சா ஜயசிங்கன் ;
" வேகக் குதிரையை வெல்வேன்," என்றான்
வீரன் ஜயசிங்கன். 6

" அந்தோ குழந்தாய்! ஆகா துன்னல் "
என்றாள் அன்னையுமே.
" தந்தை இகழ்வைத் தநயன் தீர்ப்பேன்
தாயே மன்னியுமே " 7

என்றே இளைஞன் அன்பால் இயம்பி
இனிதே வணங்கினனே ;
அன்றே அவளும் ஆசிகள் கூறி
அனுப்பிட இணங்கினளே. 8

## 3. தந்தையும் மகனும் :

தோழனுடன் டில்லியெனும்
தொன்னகரம் சென்ருன் ;
வேழமதை வெல்லுமொரு
சிங்கமென நின்ருன். 1

சிறையிருக்கும் தந்தையிணைச்
சிறுவனவன் கண்டான் ;
முறைமையிஞல் முடிவணங்கிப்
பணிவுமிகக் கொண்டான். 2

" தந்தையுமைச் சிறைவிடுக்கத்
தநயன் இதோ வந்தேன் ;
சிந்தைமகிழ் கொள்ளவரம்
தந்தருளும் உய்ந்தேன்." 3

பிள்ளைமுகம் பார்த்தபிதா
பேருவகை யுற்ருர் ;
வெள்ளமெனப் பொங்கிஎழும்
வேட்கைமொழி சொற்ருர். 4

" தவமகனே, நின் குணத்தின்
தன்மையது நன்றே !
குவலயத்தோர்க் கடங்கிவிடும்
குதிரை இது அன்றே ! 5

சிலதினமே சிறைவாசம்
செய்குவன் நான் மகனே !
நலமுடனே சென்றிடுவாய்
நாட்டினுக்கே உடனே." 6

சிந்தைஇவை கூறமகன்
தாழ்மையுடன், " தந்தாய்,
இந்தமொழி கேட்டிடவோ
இங்குவந்தேன் எந்தாய்; 7

துள்ளிவிழும் குதிரையினைத்
துடுக்கடக்கி ஓட்டி
டில்லிநகர் மன்னருக்கென்
திறமையினைக் காட்டி, 8

நமதுகுலப் பெருமையினை
நாடறியச் செய்வேன்;
தமதருளே வேண்டுகிறேன்
தந்தருள்வீர் உய்வேன்." 9

**4. வெற்றி பெற்ற வீரன்:**

மைந்தன் கூறிய மாற்றம் கேட்டே
மனது மகிழ்ந்தனரே;
" தந்தேன் தந்தேன் தந்தேன்," என்றே
தந்தை மொழிந்தனரே. 1

விட்டனன் ஓலை வீரனுக் கென்றே
டில்லி நகர்மன்னன்
பட்டண மெங்கும் பறையறைந் தனனே
பகதூர் ஷாமன்னன். 2

மாண்புடை மன்னர்கள் கரிபரி தேர்களில்
மகிழ்வுடன் வந்திருந்தார்;
ஆண்களும்பெண்களும்அணியணியாகவே
அங்கே வந்திருந்தார். 3

'தட தட'வெனத் தெய்வக் குதிரையும்
சபைமுன் வந்ததுவே!
'கட கட கட'வெனக் கண்டோர் நடுங்கிடக்
கனைத்து நின்றதுவே! 4

கலகல கலஎனக் கண்டு நகைத்தான்
காளை ஜயசிங்கன் ;
பலமது கொண்டே சிங்கம் போலே
பாய்ந்தான் ஜயசிங்கன். 5

துள்ளித் துள்ளித் துடுக்குகள் புரியத்
துவங்கிய தேகுதிரை ;
பள்ளம் மேடுகள் பார்த்தே வீழ்த்திடப்
பாய்ந்திடுமே குதிரை. 6

அஞ்சா வீரன் அச்சம் இன்றி
அமைதியின் இருந்தனனே ;
நெஞ்சம் துடித்தே நடுக்கம் எடுத்தே
நின்றோர் வருந்தினரே. 7

காடும் மேடும் கடுகி நடந்தே
களைத்திடு மேகுதிரை !
ஓடி ஓடி உள்ளம் சலித்தே
ஓய்ந்ததுவே குதிரை !

'தொம்தோம்' எனவே தோள்களைக் கொட்டினன்
தோழன் முகம்மது கான்.
தந்தோம் தந்தோம் வரிசைகள் என்றான்
மன்னன் ஷா இன்ஷா. 9

தந்தை வந்தே தழுவிக்கொண்டார்
தநயன் ஜயசிங்கை ;
வந்தோர் அனைவரும் வாழிய ஜயவென
வாழ்த்தினர் ஜயசிங்கை. 10

# 41. எங்கள் தமிழ்

எங்கள் தமிழ் நல்ல தமிழ்
எழுதப் பேச எளிய தமிழ்.

ஏணை ஆட்டி எங்கள் அன்னை
இன்ப மாகப் பாடும் தமிழ்.

குழந்தை யாகத் தவழ்ந்த போது
கொஞ்சி முத்தம் கொடுத்த தமிழ்.

நிலவைக் காட்டி நாயைக் காட்டி
நெய்யும் சோறும் தந்த தமிழ்.

அன்னை தந்தை அத்தை மாமி
அருமைக் கதைகள் சொன்ன தமிழ்.

பெரியர் சிறியர் பலரும் கூடிப்
பேசிப் பேசி மகிழும் தமிழ்.

பாலும் தேனும் கலந்த தமிழ்
நாளும் நாங்கள் கற்கும் தமிழ்.

ஆசை தீரப் படிப்போம்;
காசும் பொன்னும் குவிப்போம்.






## 42: முத்தேவியர் வணக்கம்

கல்விக் குரிய கலைமகளே!
　கலைகள் பலப்பல எமக்கருளே.
செல்வம் கொழிக்கும் திருமகளே!
　சிறப்பாய் வாழ்ந்திட எமக்கருளே. 1

வலிமைக் குரிய மலைமகளே!
　வளமுறத் திருவருள் புரிந்தருளே.
தலையால் வணக்கம் புரிகுவமே
　தயவாய்க் காத்தருள் மூவருமே. 2




# 45. தமிழ்மொழி வாழ்த்து

ஆதியில் தமிழினில் அரியதோர் இலக்கணம்
அமைத்தொளிர் அகத்தியர் பெயர்வாழி
நீதியில் நிகரற நிலவிடு திருக்குறள்
நிறுவிய வள்ளுவர் பதம்வாழி. 1

சிலப்பதி காரம்,தொல் காப்பியம், சீவக
சிந்தா மணி,செய் தோர்வாழி ;
புலவர்கள் பலர்பலர் பரிவொடு பாடிய
புகழ்பெறு நாலடி யார்வாழி. 2

தந்தையின் மொழிதவ றுரகு நாதனின்
தகைமைசொல் கம்பர்தம் நூல்வாழி ;
நந்தமக் காகவே நல்வழி நீதிகள்
நல்கிய அவ்வையின் சீர்வாழி. 3

சிற்பமோ டோவியம் சீர்மிகு மருத்துவம்
செப்பிய புலவர்கள் திறம்வாழி ;
அற்புத அடியவர் ஆழ்வார் பாடிய
அழகொளிர் பாடலின் புகழ்வாழி. 4

நூறுநா றுயிரம் நூல்கள் இயற்றிய
நுண்ணறி வாளர்தம் வழிவாழி ;
வேறுநற் கலைபல சீருடன் வெளிவர
வேண்டிடு வோம்தமிழ் மொழிவாழி. 5